25th March 1969]

சிறு குளங்கள் : இஃது இரண்டு வகைப்படும். ஒன்று, கோயில் குளம், இன்னொன்று தனிப்பட்டவர்க்குரிய குளம். இவ்விருவகைப்பட்ட குளங்களையும் சுத்தம் செய்ய அந்தந்த குளங்களுக்குறிய உரிமையாளர்களிடமிருந்து ஆண்டுக்கு ஒருமுறை பணம் பெற்றுக்கொண்டு இரு கிழமைக்கு ஒருமுறை சுத்தம் செய்யப்படுகின்றன.

முறை : குளத்தில் கண் படர்ந்திருக்கும் குப்பை கூளங்கள், செடி கொடிகள், புற்பூண்டுகள் முதலியவற்றை அகற்றி ''கமபூசியா'' என்னும ஒருவகை பூச்சிகொல்லி மீன் குளத்தில் இட்டு சுத்தம செய்யப் படுகின்றன.

குட்டைகள் : இவ்விடங்களில் தேங்கி இருக்கும் நீர்மீது வாரம் ஒருமுறை கொசு ஒழிக்கும் மருந்தடித்து கொசுக்கள் ஒழிக்கப் படுகின்றன.

Marriageable age.

* 206 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Central Government has consulted the State Government regarding raising of marriageable age; and

(*b*) if so, the reply of the Tamil Nadu Government?

திருமண வயது.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) திருமண வயதை உயர்த்துவதைக் குறித்து மத்திய அரசு தமிழக அரசின் கருத்தைக் கேட்டதா ?

(இ) ஆமெனில். தமிழ்நாடு அரசு அளித்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Government Training School for Women, Madurai.

* 207 *Q.* THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTHOSHAM) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government Training School for Women has been shifted from Madurai Town to Tirunagar;

(*b*) whether hostel facilities have been made for the accommodation of all trainees desirous of such accommodation; and

(*c*) whether special transport facilities have been arranged for the trainees who wish to reside in Madurai and attend the school as day scholars?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ), (இ) ஆம்.

(உ) போக்குவரத்து அதிகாரிகளுடன் இது குறித்து கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.